# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | மூவொரு கடவுள் பெருவிழா | 31 மே 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*



மாதாந்திர நோக்கம்:
குடும்பம் - ஒன்றித்து நடத்தல்

## ஒன்றாகப் பயணித்தல்

# மூவொரு இறைவனின் வாழ்வைப் பிரதிபலித்தல்

ஒவ்வொரு ஆண்டும் மூவொரு இறைவனின் மாபெரும் விழாவை, கடவுளின் உள்ளார்ந்த வாழ்வின் ஆழ்ந்த மறைபொருளை சற்று நிதானித்து, மாண்புடன் சிந்திக்குமாறு திருஅவை நம்மை அழைக்கிறது. இது, தந்தை, மகன், தூய ஆவியார் ஆகிய மூவொரு நபர்களின் ஒற்றுமையை, கடவுளின் உள்ளார்ந்த மறைபொருளின்மீதான நமது பிரமிப்பைப் புதுப்பித்து, நமது புரிதலை ஆழப்படுத்தி, நம்முடைய ஆராதனையை மாட்சியோடுக் கொண்டாடும் ஒருவிழாவாகும். இந்த மறையுண்மை அறிவுப்பூர்வமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒரு கோட்பாடு மட்டுமல்ல; மாறாக நாம் ஒருவருக்கொருவர் அன்புறவில் வாழ அழைக்கப்படும் விதத்தை வடிவமைக்கும் ஒரு உயிருள்ள இயல்பாகும்.

இன்றைய நற்செய்தியில் , உலகின்மீது கடவுளுக்கு இருக்கும் அன்பின் ஆழம் நமக்கு நினைவூட்டப்படுகிறது. தந்தை, தம் மகனை உலகைத் தண்டிக்க அல்ல, மாறாக அதைக் காப்பாற்றவே அனுப்புகிறார். தூய ஆவியார் நிழலிடுதலால், அருள்நிறைந்த கன்னி மரியாவின் கருவில் கருத்தரிக்க ஒரு மகனை அவர் அனுப்பும்போது, ஒவ்வொரு காலகட்டமாக அவருடைய அன்பு வெளிப்படுகிறது. இந்த மீட்பின் பணியின் மூலம், மனிதகுலம் கடவுளின் வாழ்விற்க்குள் ஈர்க்கப்படுகிறது.

கடவுளின் அன்பின் ஒன்றிப்பு என்பதை திரித்துவம் வெளிப்படுத்துகிறது. தமதிரித்துவத்தின் ஒவ்வொரு நபரும் தனித்துவமானவர்கள். ஆயினும் ஒருவருக்கொருவர் தியாகத்தில் முழுமையாக ஒன்றுபட்டுள்ளனர். இந்த தெய்வீக ஒன்றிப்பு, மனித உறவுகளுக்கு, குறிப்பாக குடும்பத்திற்குள் ஒரு முன்மாதிரியாக அமைகிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் தவறான புரிதல்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும் தருணங்கள் உண்டு. ஆயினும் இந்த வேறுபாடுகள் பிரிவினைக்கான காரணங்களாக மாறவேண்டியதில்லை. மாறாக, குடும்ப உறுப்பினர்கள் அன்பில் ஒன்றுபட்டிருக்கும் அதே வேளையில், ஆளுமை, கொடைகள், மற்றும் கண்ணோட்டங்களில் உள்ள பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு அரவணைக்கக் கற்றுக்கொள்ளும்போது அவை வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக மாறக்கூடும்.

மன்னிப்பும் தமதிரித்துவ அன்பின் ஒரு இன்றியமையாத வெளிப்பாடாகிறது. உறுப்பினர்கள் ஒருவரையொருவர் மன்னித்து, நல்லிணக்கத்தை நாடும்போது, அவர்கள் கடவுளிடமிருந்தே பாய்ந்து குணமளிக்கும் அன்பில் பங்கேற்கிறார்கள். குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, உறுதிப்படுத்தி, ஒருவரிடமுள்ள சிறந்தவற்றை வெளிக்கொணரும்போது, அவர்கள் தமதிரித்துவத்தின் உயிரளிக்கும் ஒன்றிப்பைப் பிரதிபலிக்கிறார்கள். அங்கு அன்பு தொடர்ந்து கொடுக்கிறது மற்றும் தொடர்ந்து பெறுகிறது.

**நமது நடத்தை தமதிரித்துவத்தின் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டுமானால், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் நமது வார்த்தைகளையும் செயல்களையும் வழிநடத்த வேண்டும்.** இந்த தமதிரித்துவ அன்பு, பிரதிபலிக்கக் கூடிய முதல் இடமாக குடும்பங்கள் பெரும்பாலும் அமைகின்றன. குடும்ப வாழ்க்கையின் அன்றாட ஓட்டத்தில், குடும்ப உறுப்பினர்கள் பொறுமை, புரிந்துணர்வு மற்றும் இரக்கத்துடன் ஒருவருக்கொருவர் துணையாக இருக்க அழைக்கப்படுகிறார்கள். ✣

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)
MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**
விடுதலைப் பயணம் 34: 4-6, 8-9
திருப்பாடல் - தானியேல் 3: 52-56
2 கொரிந்தியர் 13: 11-13
யோவான் 3: 16-18

**இறைவேண்டல்**

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.
தொடக்கத்தில் இருந்ததுபோல
இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.
ஆமென்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 22/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org